செ.வெ.எண்.07 நாள்: 02.05.2020

# தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் வட்டம் மேலகரந்தை சோதனைசாவடியில் மேற்கொள்ளபட்டு வரும் கண்காணிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

---

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் வட்டம் மேலகரந்தை சோதனைசாவடியில் மேற்கொள்ளபட்டு வரும் கண்காணிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.05.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.
பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தாவது:

வெளி மாவட்டத்தில் இருந்து தூத்துக்குடி மாவட்டத்திற்கு பல்வேறு காரணங்களுக்காக வருகை தரும் நபர்கள் உரிய அனுமதி பெற்று வருகிறார்களா என்பதையும், அனுமதி பெறாமல் ஏதேனும் நபர்கள் வருகை தருகிறார்களா என்பதை கண்காணிக்க குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் வருவாய்த்துறை அலுவலர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள். மேலும் அவசர ஊர்தி தேவைப்படும்பட்சத்தில் பயன்படுத்திட தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. சோதனைசாவடியில் அனைத்து வாகனங்களும் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதை கண்காணித்து அதன் பின்னர் மாவட்டத்திற்குள் அனுப்பபடும். பிற மாவட்டத்தில் இருந்து அனுமதி பெற்று வரும் நபர்களும், அனுமதி பெறாமல் வரும் நபர்களும் கண்டறியப்பட்டு உரிய மருத்துவ பரிசோதனை செய்யப்படுகிறது. இதற்காக எட்டயபுரம் பாரதியார் பாலிடெக்னிக் கல்லூரி பயன்படுத்தப்பட உள்ளது. பரிசோதனை முடிவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டால் அந்த நபரை தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும்.

கொரோனா தொற்று இல்லை என்ற நபர்களை 14 நாட்கள் தனிமைபடுத்திடும் வகையில் அவர்களது வீட்டில் ஸ்டிக்கர்களை ஒட்டப்படும். காலையில் மேற்கொள்ளும் பரிசோதனைகளை முடிவு கிடைக்கபெற்றதுடன் அவர்களை வீட்டிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இரவு 10 மணிக்கு மேல் சோதனை சாவடியில் வருகை தரும் வெளி மாவட்ட நபர்களை எட்டயபுரம் பாரதியார் பாலிடெக்னிக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டு மாதிரிகள் சேகரித்து முடிவு கிடைத்தபின் அவர்களுக்கு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படும். தங்க வைக்கப்படுவர்களுக்கு தேவையான உணவு வழங்கிட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆண்கள், பெண்கள் தனித்தனியாக தங்கும் வகையில் எட்டயபுரம் பாரதியார் பாலிடெக்னிக் கல்லூரியில் ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. நமது மாவட்டத்திற்கு பிற மாவட்டத்திலிருந்து வரும் அனைத்து சோதனை சாவடியிலும் கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தபட்டுள்ளது. இந்த பகுதிகளும் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளவும், தனிமைபடுத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் எட்டயபுரம் பாரதியார் பாலிடெக்னிக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுள்ள வசதிகளை பார்வையிட்டார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் பால கோபாலன், இ.கா.ப., கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.விஷ்ணுசந்திரன், இ.ஆ.ப., கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.விஜயா, நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் திரு.பாலசுப்பிரமணியன், துணை இயக்குநர் சுகாதார பணிகள் கோவில்பட்டி மரு.அனிதா, பொதுப்பணித்துறை (கட்டடம் மற்றும் கட்டுமானம்) உதவி செயற்பொறியாளர் திரு.அருள்நெறிசெல்வன், எட்டயபுரம் வட்டாட்சியர் திரு.அழகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.மாணிக்கவாசகம், காவல் ஆய்வாளர் திருமதி.ஞானபிரகாசி, செயல் அலுவலர் திரு.கனேசன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி